**ஜூலை - 7**

**"இதோ, தேவ ஆட்டுக்குட்டி ."   - யோவா 1 : 36**

கர்த்தருடைய எல்லா ஊழியக்காரரும் கர்த்தரை மற்றவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர வேண்டுமேயொழிய தங்களையல்ல நாம் ஒவ்வொருவரும் தேவ ஆட்டுக்குட்டியை ஜனங்களுக்குச் சுட்டிக்காட்ட நமது சக்திகளை ஏவுவோமாக, தன்னுடைய சொந்த நலனையோ, அல்லது சந்தோஷத்தையோ நாட அல்ல. எங்கு காணப்பட்டாலும் பணிவு ஒரு இரத்தினத்திற்கு சமமானது. அது ஆவியின் குணசீலங்களில் ஒன்று. கர்த்தருக்குப் பிரதிஷ்டை செய்திருக்கிற ஜனங்கள் எல்லோரும், தங்களில் அது அதிகமாய் அபிவிருத்தி செய்யப்பட்டு நன்றாக மெருகு கொடுக்கப்பட்டிருக்க நாடவேண்டும். மேலும் யேசுவினுடைய பாடுகளிலுள்ள ஐக்கியத்தின் பாதையின் சம்பந்தமாகவும் அப்போஸ்தலர் மூலமாக அவர் நமக்காக விட்டுச் சென்றிருக்கிற போதனைகளிலிருந்தும், அவர் தானாக சொல்லியும், செய்தவைகளிலிருந்தும் பாடங்களைப் பெற்று நாம் அவருடைய பாதையில் நடக்கிறோம் என்றும், கூடுமானவரை அவர் இன்று இங்கிருந்தால் என்ன செய்வார் என்பதையும் சற்றேகுறைய செய்யக் கஷ்டப்பட்டு முயற்சி செய்கிறோம் என்பதே யேசுவைப் பின்பற்றுவதின் சிறந்த அர்த்தமாகும் என்பதை ஞாபகத்தில் வைப்போமாக.

**- Z ’99, 14, 15 (R 2417)**

கிறிஸ்து தேவ ஆட்டுக்குட்டி ஏனென்றால், மாசற்ற ஒருவராக நிசான் மாதம் பத்தாம் தேதி அவர் தெரிந்தெடுக்கப்பட்டு தேவனுடைய ஜனங்களுக்காக பஸ்கா ஆட்டுக்குட்டியாக பதினான்காம் நாள் கொல்லப்பட்டார். ஆட்டுக்குட்டியைப்போல அவர் தன்னை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்தார். தேவனுடைய வீட்டின் நிலையின் மேல் சட்டத்திலும் வாசலின் நிலைக்கால்களிலும் தெளிக்கப்பட்டிருக்கிற அவருடைய இரத்தம், இரண்டாம் மரணத்தின் கரத்தை நமக்குத் தீங்கு செய்யாதபடி தடுத்து நிறுத்துகிறது. அரையில் கச்சை கட்டிக்கொண்டும், கால்களில் பாதரட்சை தொடுத்துக்கொண்டும், கையில் தடிபிடித்துக்கொண்டும் பரம கானானுக்குரிய நமது பிரயாணத்துக்காக நாம் நின்றுகொண்டு, துப்பரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடு உபத்திரவத்தின் கசப்பான கீரைகளோடு சுட்ட அவருடைய மாம்சத்தில் பங்குகொள்ளுவது நமது சலுகையாயிருக்கிறது. **- P ’32, 95.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**ஏசா 45:22; 65:1,2; எபி 12:2; ஆதி 22:7,8; யாத் 12:3; ஏசா 53:7; யோவா 1:29; அப் 8:32; 1பேது 1:19; வெளி 5:6-14; 14:1,4; 19:7-9; 21:14,22,23;22:1,3.**

**கோபுர வாசிப்பு : Z ’12, 110 (R 4998).**

**வினாக்கள் : நான் இவ்வாரத்தில் தேவ ஆட்டுக்குட்டியைக் கண்டு கொண்டேனா? எப்படி? பலன்கள் எவை?**